**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 21/2023**
**Prosecution Witness**:4

| Name | மலைச்சாமி (PW4) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | தங்கராஜ் | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **22nd day of September 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

1) நான் தற்போது கொடுமுடி, சாலைப்புதூரில் குடியிருந்து கொண்டு டாடா ஏஸ் வாகனத்தில் பழைய இரும்பு விற்பனை செய்து வருகிறேன். என்னுடைய டாடா ஏஸ் வண்டியின் பதிவு எண் தற்போது எனக்கு ஞாபகமில்லை. ஆஜர் எதிரியை எனக்கு ஞாபகமில்லை. கடந்த 30.04.2023ம் தேதி காலை 10.00 மணிக்கு நான் எனது டாடா ஏஸ் வண்டியில் சிவகிரியில் இருந்து சாலைப் புதூர் நோக்கி வீட்டுக்கு வந்து கொண்டிருந்தேன். சிவகிரி, சின்னியம்பாளையம் அருகில் நான் ரோட்டில் வந்தபோது ரோட்டை குறுக்காக ஒரு நபர் எனது வாகனத்திற்கு முன்னால் வந்தார். நான் அவர் அடிபடாமல் இருக்க வேண்டி எனது டாடா ஏஸ் வண்டியை இடதுபுறமாக நிறுத்திவிட்டேன். எனக்கு பின்னால் வந்த ஜேசிபி வண்டி எனது டாடா ஏசின் மீது மோதி எனக்கு முன்னால் சென்ற நபரின் மீது மோதிவிட்டது. அந்த ஜேசிபி வாகனத்தின் பதிவு எண் தெரியாது. அதை ஓட்டி வந்த நபரைப் பற்றியும் 3 வருடம் ஆனதால் எனக்கு ஞாபகமில்லை. அடிபட்ட நபர் மருத்துவமனையில் இறந்துவிட்டதாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை இந்திய சாட்சிய சட்டப் பிரிவு 154ன் கீழ் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-**

போலீசார் விசாரணையின்போது கடந்த 30.04.2024ம் தேதி காலை 10.00 மணிக்கு சின்னியம்பாளையம் காலணி அருகில் எனது டாடா ஏஸ் TN 54 X 2439 என்ற

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.09.22 08:47:38 +0530

எண்ணுள்ளா வாகனத்தை ஓரமாக நிறுத்தியிருந்ததாகவும், எனக்கு பின்னால் அதே ரோட்டில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி விளக்கேத்தியில் இருந்து சிவகிரி நோக்கி வந்த ஜேசிபி வாகனம் TN 86 F 4078 என்ற எண்ணுள்ள வாகனத்தை ஆஜர் எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து எனது வண்டியின் பின்னால் மோதியதாகவும், அதன் காரணமாக எனது டாடா ஏஸ் வாகனம் எனக்கு முன்னால் சென்று கொண்டிருந்த முத்துவீரன் என்பவர் மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும் சொன்னேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரி கேட்டுக் கொண்டதன்பேரில் உண்மையை மறைந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டதால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்பட்டது.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2025.09.22 08:47:43 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 21/2023**
**Prosecution Witness**:5

| | | | |
|---|---|---|---|
| Name | (PW5) பாலகிருஷ்ணன் | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **22nd day of September 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

1) நான் தற்போது சிவகிரி சின்னியம்பாளையம் காலனியில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 30.04.2023ம் தேதி காலை 10.00 மணிக்கு எனது வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது வீட்டிற்கு வெளியில் சத்தம் கேட்டது. அதனால் நான் வீட்டிற்கு வெளியே வந்து பார்த்தேன். ஒரு ஜேசிபி வாகனம் ஒரு வேப்ப மரத்தின் மீது மோதியிருந்தது. பாத்திரம் விற்கும் டாடா ஏஸ் வாகனமும் சம்பவ இடத்தில் இருந்தது. ஒரு நபருக்கு பின்தலை, கால், தொடை ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டிருந்தது. அந்த நபரை 108 ஆம்புலன்ஸ் மூலமாக சிவகிரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். விபத்திற்கு யாரின் அஜாக்கிரதை காரணம் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.09.22 08:47:49 +0530

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டதால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்பட்டது.

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.09.22 08:47:53 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 21/2023**
**Prosecution Witness**:6

| | | | |
|---|---|---|---|
| Name | (PW6) நித்யா | Taluk | |
| Father's Name | கிருஷ்ணமூர்த்தி | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **22nd day of September 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

1) நான் தற்போது சிவகிரி பொரசமேட்டுபுதூரில் குடியிருந்து வருகிறேன். எனது மாமியார் வீடு சிவகிரி, சின்னியம்பாளையம் காலனியில் உள்ளது. கடந்த 30.04.2023ம் தேதி காலை 10.00 மணிக்கு எனது வீட்டில் இருந்தபோது வீட்டிற்கு வெளியில் சத்தம் கேட்டது. அதனால் நான் வீட்டிற்கு வெளியே வந்து பார்த்தேன். ஒரு ஜேசிபி வாகனம் ஒரு வேப்ப மரத்தின் மீது மோதியிருந்தது. பாத்திரம் விற்கும் டாடா ஏஸ் வாகனமும் சம்பவ இடத்தில் இருந்தது. ஒரு நபருக்கு பின்தலை, கால், தொடை ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டிருந்தது. அந்த நபரை 108 ஆம்புலன்ஸ் மூலமாக சிவகிரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். விபத்திற்கு யாரின் அஜாக்கிரதை காரணம் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டதால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.09.22 08:47:58 +0530

**மறுவிசாரணை:— இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.09.22 08:48:02 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 21/2023**
**Prosecution Witness**:7

| Name | (PW7) குமார் | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **22nd day of September 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present.)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

1) நான் தற்போது சிவகிரி கருக்கம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு டிரைவராக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன முத்துவீரன் எனது அப்பா. கடந்த 30.04.2023ம் தேதி எனது அப்பா முத்துவீரன் காலை 10.00 மணிக்கு சின்னியம்பாளையம் காலணி அருகில் ரோட்டில் நடந்து சென்றபோது ஒரு ஜேசிபி வாகனம் டாடா ஏஸ் வாகனத்தின் மீது மோதி அதன் காரணமாக என் அப்பா மீது மோதியதாக சம்பவ இடத்தில் இருந்து மாரிமுத்து மற்றும் பழனிச்சாமி ஆகியோர்கள் தகவல் சொன்னார்கள். அதன் பேரில் நான் சிவகிரி அரசு மருத்துவமனை சென்று எனது அப்பாவை பார்த்தேன். எனது அப்பா முத்துவீரனுக்கு பின் தலை, கால், தொடை, வலது காலிலும் அடிபட்டிருந்தது. அவரை மேல்சிகிச்சைக்காக ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். எனது அப்பா அன்றைய தினமே பகல் 12.30 மணிக்கு மருத்துவமனையில் இறந்துவிட்டார். விபத்து பற்றி எனது அம்மா பழனியம்மாள் சிவகிரி காவல் நிலையத்தில் புகார் செய்திருந்தார். அதன் பேரில் போலீசார் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் எனது அப்பாவின் பிரேதத்தின்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.09.22 08:48:08 +0530

மீது விசாரணை மேற்கொண்டார்கள். நானும் உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நஷ்ட ஈட்டு வழக்கிற்காக அ.சா.1 கொடுத்த தவறான புகாரின் பேரில் புகாருக்கு ஆதரவாக முதல் விசாரணையில் தவறாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2025.09.22 08:48:12 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 21/2023**
**Prosecution Witness**:8

| | | | |
|---|---|---|---|
| Name | (PW8) மகேந்திரன் | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **22nd day of September 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

1) நான் தற்போது திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில், அய்யம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு மீன்கடையில் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன முத்துவீரன் எனது நெருங்கிய உறவினர் ஆவார். அவர் கடந்த 30.04.2023ம் தேதி காலை 10.00 மணிக்கு சின்னியம்பாளையம் காலணி அருகில் ரோட்டில் நடந்து சென்றபோது ஒரு ஜேசிபி வாகனம் டாடா ஏஸ் வாகனத்தின் மீது மோதி அதன் காரணமாக முத்துவீரன் மீது மோதியதாக சம்பவ இடத்தில் இருந்து எனது அத்தை பழனியம்மாள் தகவல் சொன்னார். அதன் பேரில் நான் சிவகிரி அரசு மருத்துவமனை சென்று முத்துவீரனை பார்த்தேன். முத்துவீரனுக்கு பின் தலை, கால், தொடை, வலது காலிலும் அடிபட்டிருந்தது. அவரை மேல்சிகிச்சைக்காக ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அவர் அன்றைய தினமே பகல் 12.30 மணிக்கு மருத்துவமனையில் இறந்துவிட்டார். விபத்து பற்றி எனது அத்தை பழனியம்மாள் சிவகிரி காவல் நிலையத்தில் புகார் செய்திருந்தார். அதன் பேரில் போலீசார் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் முத்துவீரனின் பிரேதத்தின் மீது

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.09.22 08:48:17 +0530

விசாரணை மேற்கொண்டார்கள். நானும் உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நஷ்ட ஈட்டு வழக்கிற்காக அ.சா.1 கொடுத்த தவறான புகாரின் பேரில் புகாருக்கு ஆதரவாக முதல் விசாரணையில் தவறாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2025.09.22 08:48:22 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.